செய்தி வெளியீடு எண் : 936 நாள்: 09.06.2022

## செய்தி வெளியீடு

### 44–வது செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டிக்கான இலச்சினை மற்றும் சின்னம் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிமுகப்படுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (9.6.2022) பெருநகர சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டட வளாகத்தில், மாமல்லபுரத்தில் நடைபெறவுள்ள 44–வது செஸ் ஒலிம்பியாட் 2022 போட்டிக்கான இலச்சினை (Logo) மற்றும் சின்னம் (Mascot) ஆகியவற்றை அறிமுகப்படுத்தினார்.

முதன் முறையாக தமிழ்நாட்டில் செஸ் ஒலிம்பியாட் போட்டி நடைபெறவுள்ளது. இப்போட்டியானது சென்னையை அடுத்த மாமல்லபுரத்தில் 2022 ஜூலை 28ம் தேதி முதல் ஆகஸ்டு 10ம் தேதி வரை நடைபெறுகிறது. இப்போட்டியில் 186 நாடுகளைச் சார்ந்த 2000க்கும் மேற்பட்ட சர்வதேச சதுரங்க விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் பங்கேற்கவுள்ளனர்.

இப்போட்டியினை தமிழ்நாட்டில் நடத்துவது குறித்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் தமிழ்நாடு அரசு மற்றும் அகில இந்திய சதுரங்க கூட்டமைப்புடன் (AICF) புரிந்துணர்வு ஒப்பந்தம் 14.05.2022 அன்று தலைமைச் செயலகத்தில் கையெழுத்தானது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, இந்த ஒலிம்பியாட் போட்டிகள் சிறப்பாக நடைபெற தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் சென்னை சதுரங்க ஒலிம்பியாட் கமிட்டி (COCO) என்ற ஒரு சிறப்பு குழு அமைக்கப்பட்டு அனைத்து முன்னேற்பாடு பணிகளும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது

மேலும், இப்போட்டிக்கான ஒருங்கிணைப்பு பணிகளை மேற்கொள்ள சிறப்பு அலுவலராக தேசிய நலவாழ்வு குழும மேலாண்மை இயக்குநர் அவர்கள்

நியமிக்கப்பட்டு முன்னேற்பாட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. இந்தப் போட்டியினை உலகமே வியக்கும் வகையில் நடத்திட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், பன்னாட்டு சதுரங்க கூட்டமைப்பினர் (FIDE) கொண்ட உயர்மட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு பணிகள் கண்காணிக்கப்பட்டு சிறப்புடன் நடைபெற்று வருகிறது.

44–வது சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான ஜோதி ஏற்றப்பட்டு நாடு முழுவதும் வலம் வரவுள்ளது. தமிழ்நாடு அரசின் சார்பில் இப்போட்டி குறித்த விழிப்புணர்வினை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் மாணவ, மாணவியர்களிடையே செஸ் போட்டிகள் நடத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும், பேருந்துகள், இரயில்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் இச்சர்வதேச செஸ் ஒலிம்பியாட் போட்டி குறித்து விளம்பரம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வண்ண விளக்குகளால் ஒளிரூட்டப்பட்ட 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான இலச்சினை (Logo) மற்றும் "தம்பி" என்கிற சின்னத்தினையும் (Mascot) அறிமுகப்படுத்தினார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 44வது செஸ் ஒலிம்பியாட் போட்டிக்கான 50 நாள் கவுண்ட் டவுன் (Countdown) பொதுமக்களின் பார்வைக்காக ஒளிப்படக் காட்சியாக ரிப்பன் கட்டடத்தில் தொடங்கி வைத்தார். மேலும், "#CHESS CHENNAI 2022" என்ற HashTag–யை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட, அகில இந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஞ்சய் கபூர் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு, மாண்புமிகு சுற்றுச்சூழல்–காலநிலை மாற்றத்துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் திரு.சிவ.வீ.மெய்யநாதன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. மா. மதிவேந்தன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் திரு.மு. மகேஷ் குமார், தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. சிவ் தாஸ் மீனா, இ.ஆ.ப., இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை முதன்மைச் செயலாளர் செல்வி அபூர்வா, இ.ஆ.ப., செஸ் ஒலிம்பியாட் சிறப்பு அலுவலர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் திரு.க.பா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அகில இந்திய சதுரங்க கூட்டமைப்பின் தலைவர் டாக்டர் சஞ்சய் கபூர், செயலாளர் திரு.பரத் சிங் சவுகான், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in